# பாப்பரசர் கோரிக்கை: கொமெய்னி நிராகரிப்பு







★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
EELANADU

மலர் 21 ஐப்பசி 26 ஜுல்ஹஜ் 21 இதழ் 273
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 12-11-79



UNIVERSITY OF SRI LANKA ... RECEIVED 1979-11-12 PERIODICALS DIVISION LIBRARY


(தெஹ்ரான்)

தெஹ்ரானிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் பணயம் வைக்கப்பட்டுள்ள அமெரிக்க அதிகாரிகளை விடுவிக்குமாறு பரிசுத்த பாப்பரசர் விடுத்த கோரிக்கையை ஈரானிய மதத் தலைவர் அயதொல்லா கொமெய்னி நேற்று நிராகரித்துவிட்டார்.

அதே நேரத்தில் அயத்தொல்லா கொமெய்னியின் அனுமதி பெற்று அமெரிக்க அதிகாரிகள் பணயமாக வைக்கப்பட்டுள்ள தூதரகத்துக்குள் பாப்பரசரின் பிரதிநிதி நேற்று சென்றபோது அங்கு நின்ற மாணவர்கள் அவரைக் கேலி செய்து துன்புறுத்தியதாக வாஷிங்டன் செய்திகள் நேற்றுத் தெரிவித்தன.

நிலைமை இவ்வாறு இருக்க, ஈரான் அரசாங்கம் தனது நிலையை மேலும் தெளிவு படுத்தும் பொருட்டு ஈரானிலுள்ள சகல வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்ப முடிவு செய்துள்ளது "அமெரிக்காவிலுள்ள ஷாவை ஈரானுக்கு தாமதமின்றி அனுப்பிவைக்க உங்கள் செல்வாக்கைப் பயன்படுத்துங்கள் அவர் இங்கு வந்ததும் அவர்மீது பகிரங்க விசாரணை நடைபெறும் விசாரணையில் குற்றவாளியாகக் காணப்பட்டால் தண்டனை கிடைக்கும் நிரபராதியாகக் காணப்படும் பட்சத்தில் அவர் அமெரிக்காவுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்படுவார்"


(6-ம் பக்கம் பார்க்க)


# வழிபாட்டுத் தலங்கள் முன் உண்ணாவிரதம்!

## யாழ். நகரில் டிச. 9-ல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமை மீறலுக்கு எதிரான சாத்வீக இயக்கத்தின் ஒரு அங்கமாக, டிசம்பர் மாதம் ஒன்பதாம் தேதி யாழ்ப்பாணத்தில் மூன்று வழிபாட்டுத்தலங்களில் உண்ணாவிரதத்தை ஆரம்பிப்பது என்று இனங்களுக்கிடையே நீதியையும், சமத்துவத்தையும் நிலைநாட்டும் இயக்கத்தின் வடபிரதேசக் கிளை தீர்மானித்துள்ளது.

யாழ் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் திரு. சிலன் கதிர்காமர் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் பல எம்.பி.க்களும் இந்துசமயப் பிரமுகர்களும், பல்வேறு சர்வமத இயக்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

நல்லூர் கந்தசுவாமி கோவிலிலும், கத்தோலிக்க ஆலய மொன்றிலும் பள்ளிவாசலிலும் டிசம்பர் 9ம் திகதி உண்ணாவிரதத்தை நடத்துவதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

டிசம்பர் 10-ம் திகதி வடபகுதியில் பூரணஹர்த்தாலை நடத்துவது பற்றி முடிவுசெய்ய உபகுழு ஒன்று இக் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது. (க)

## வெளியேற்ற உத்தரவு!

[வாஷிங்டன்]

அமெரிக்காவில் சட்ட விரோதமாகத் தங்கியிருக்கும் ஈரான் மாணவர்களை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்றுமாறு அமெரிக்க ஜனாதிபதி திரு ஜிம்மி கார்ட்டர் அதிகாரிகளைப் பணித்துள்ளார். [க]

## "யாழ். மாவட்டத்தில் 1000 ஆசிரியர்களுக்கு காலி இடங்கள் உண்டு"

### எதிர்க்கட்சித் தலைவர் தகவல்

(பண்டத்தரிப்பு)

"கட்டிடங்களை நிறுவுவதினால் மட்டும் பாடசாலைகள் அபிவிருத்தியடைந்துவிட முடியாது. மாணவர்களை நல்லொழுக்கமுடையவர்களாகவும் தன்னம்பிக்கையுடையவர்களாகவும் உருவாக்குவதில் பாடசாலை ஆசிரியர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. இந்நாட்டின் சிறந்த எதிர்காலப் பிரஜைகளாக எமது மாணவர்களை உருவாக்கும் பணியில் ஆசிரியர்கள் பெற்றோர் இணைந்து செயல்படவேண்டும்"

இவ்வாறு மாதகல் சென் ஜோசப் மகாவித்தியாலயம் புதிய கட்டிடத் திறப்புவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவரும் காங்கேசன்துறைத் தொகுதி எம். பி யுமான திரு அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் திரு. எம். இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் புதிய வகுப்பறைக் கட்


[6-ம் பக்கம்பார்க்க]



G. C. E. A/L | APRIL / AUGUST 1980

பிரத்தியேக - விசேட - வகுப்புகள்

விண்ணப்பம்: 16-11-1979 இற்கு முன்பாக

பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை அளிப்பதே ஒரேநோக்கு

- 40 மாணவர்கட்கு மட்டும் அனுமதி
- தனிப்பட்ட நேரடிக் கவனம் செலுத்தல்
- கடந்தகால கல்வித்தகைமைகள் பரிசீலிக்கப்படும்
- மாதாமாதம் பரீட்சைகள், விளக்கக் குறிப்புகள், வினாவிடை வகுப்புகள்

மாணவர்கள் பெற்றோரின் உத்தரவாதத்துடன் அனுமதிக்கப்படுவர்,

விபரங்கட்கு:

REGISTRAR.
BOND INSTITUTES,
HOSPITAL ROAD,
JAFFNA,

4070


# ஷாவை அனுப்புமாறு யு. எஸ். அதிகாரிகள் கடிதம்

## பயமுறுத்திப்பெறப்பட்டதாக அமெரிக்கா குற்றச்சாட்டு

வாஷிங்டன், நவ 11

முன்னாள் ஈரான் மன்னர் ஷாவை ஈரானுக்கு திருப்பி அனுப்புமாறு கோரி, ஈரானில் பணயம் வைக்கப்பட்டிருக்கும் சில அமெரிக்க அதிகாரிகளினால் கையெழுத்திடப்பட்டு எழுதப்பட்டதாகக் கூறப்படும் கடிதம் ஒன்றினை ஈரானிய புரட்சி மாணவர்கள் அமெரிக்காவிற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அக்கோரிக்கைக் கடிதத்தில், பணயம் வைக்கப்பட்டிருக்கும் 60 அமெரிக்க அதிகாரிகளில் 33 பேர் மாத்திரமே கையெழுத்திட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் பணயக் கைதிகளால் அனுப்பப்பட்டதாகக் கூறப்படும் கடிதத்தால் எந்தவித பலனும் ஏற்படாது என்று அமெரிக்க வெளிவிவகார அதிகாரி திரு ஜோலியவன் தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதம் உண்மையில் தயாரிக்கப்பட்டாலும், அது பணயக் கைதிகளைப் பயமுறுத்திப் பெறப்பட்டதால் அதற்கு எந்த விதமான பெறுமதியும் கிடையாது என்றும் பணயம் வைத்திருப்பவர்களின் கட்டுமே அதன் தாக்கம் பிரதிபலிக்கும் என்றும் திரு பவல் மேலும் கூறினர். (ரு)

## மாதர்சங்க முன்மாதிரிக்கு நல்லூர் எம். பி. பாராட்டு

[யாழ்ப்பாணம்]

"இறக்குமதிப் பொருட்கள் மீது மோகங்கொள்வாமல் எமது நாட்டு உற்பத்திப் பொருட்களை வாங்கி எமது தொழிலாளர்களை ஊக்குவிப்பதோடு, வேலையில்லாப்பிரச்சினையையும் தீர்த்துவைக்க மக்கள் முன்வரவேண்டும்"

கொக்குவில் மாதர்சங்கத்தின் சார்பில் கொக்குவில் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் நல்லூர் எம் பி திரு. மு. சிவசிதம்பரம் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

மேலதிக அரசாங்க அதிபர் எஸ் பி ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது:

கொக்குவில் மாதர்சங்கத்தின் சார்பில் நடைபெற்று வரும் தையல்பயிற்சிநிலையம் கடந்த பத்து வருடங்களாக திறம்பட இயங்கிவருகின்றது. கடந்த பத்து வருடங்களாக மாதர்சங்கத்தின் தலைவியாகத் திருமதி சத்தனம் இருப்பதால்தான், கொக்குவில் மாதர்சங்கமும், அதன்சார்பில் இயங்கும் தையல்நிலையமும் விரைவாக முன்னேற முடிந்துள்ளது. இப் பொருட்காட்சியில் வைக்கப்பட்டுள்ள பொருட்களின் தரம் மிகவும் திருப்திகரமாக உள்ளது. இப் பொருட்கள் யாவும் கொக்குவில் கிராமத்துப் பெண்களின் கைவண்ணத்தில் உருவாகியுள்ளன. இப் பொருட்கள் யாவும் கொக்குவில் கிராமத்துப் பெண்களின் கைவண்ணத்தில் உருவாகியுள்ளன. இப் பொருட்களை இங்குள்ள மக்கள் வேண்டிப் பாவிப்பதில் அவர்களுக்கு ஒரு மனத் திருப்தி ஏற்படுவதுடன் உங்களின் பணம் உங்களிடமே திரும்பிவருகிறது! மாதர் சங்கத் தலைவி விடுத்த வேண்டு


(6-ம் பக்கம் பார்க்க)

